பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

24 09 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுயசார்பு இந்தியா என்பது ஒட்டுமொத்த உலகிற்கும் உயர்தர சாதனங்களைத் தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

2. தேசிய விருது பெற்ற திரையுலகினருக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

3. நாட்டிலேயே அதிக வளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. பசுந்தேயிலைக்கு மானியம் வழங்க அஇஅதிமுக நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

5. ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சுயசார்பு இந்தியா என்பது, இந்தியாவின் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகிற்கும் உயர்தர சாதனங்களைத் தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

மொராக்கோவின் Berrechid நகரில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமும், டாடா குழும்மும் கூட்டாக அமைத்துள்ள பாதுகாப்புத் தளவாட தொழிற்சாலையைத் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த ஆலையில், அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மொராக்கோ ராணுவத்திற்குத் தேவையான கவச வாகனங்கள் தயாரிக்கப்பட இருப்பதாகவும் அவர் கூறினார்.

இங்கு தயாரிக்கப்படும் கவச வாகனங்கள் அடுத்த மாதத்திற்குள், மொராக்கா ராணுவத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய சந்தைக்கான நுழைவாயிலாக மொராக்கோ திகழ்வதாகவும், இந்தியா - மொராக்கோ கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டுள்ள்ள புதிய தொழிற்சாலை, ஏற்றுமதிக்கான முக்கிய மையமாக திகழும் என்றும் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய விருது பெற்ற திரையுலகினருக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தாதா சாகேப் பால்கே விருது நடிகர் மோகன் லாலுக்கு வழங்கப்பட்டிருப்பது இந்திய திரையுலகிற்கு அவர் வழங்கிய பங்களிப்பிற்கு அங்கீகாரமாக அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

சிறந்த துணை நடிகருக்கான விருதைப் பெற்றுள்ள எம்.எஸ். பாஸ்கர், தாம் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கு ஏற்ப திரையில் வாழ்ந்து காட்டும் வல்லமை கொண்டவர் என்றும் அவர் பாராட்டியுள்ளார்.

சிறந்த தமிழ்த் திரைப்படம் மற்றும் சிறந்த திரைக்கதைக்கான விருதைப் பெற்றுள்ள இயக்குநர் ராம்குமார் பாலகிருஷ்ணன், இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், சிறந்த நடிகர், நடிகைக்கான விருதைப் பெற்ற ஷாருக் கான், ராணி முகர்ஜி உள்ளிட்டோருக்கும் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வளர்ச்சிப் பாதையில் நாடு வேகமாக முன்னேறிச் செல்வதாக முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில், ஒரே தேசம் - ஒரே கனவு என்பதை வலியுறுத்தி ஆயிரத்து 330 குறட்பாக்களை, ஆயிரத்து 330 குரலில் சொல்லும் நிகழ்ச்சியில் பேசிய அவர், உற்பத்திக்கான இந்தியா திட்டம் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்திருப்பதாக கூறினார்.

மங்கல்யாண் போன்ற திட்டங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு உதாரணமாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டிலேயே அதிக வளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கிப் பேசிய அவர், கடந்த நான்கரை ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் 19 லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பதன் மூலம் அவர்கள் பல்வேறு திட்டங்களின் மூலம் பயனடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டிருப்பதன் மூலம் இன்னும் அதிக மகளிர் பயனடைவார்கள் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<>>>>

இனி மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

(Opening Tune - 7 Sec)

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்புத் தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது செயற்கை நுண்ணறிவு இயக்கம்.

(Voice PKG - 110 Sec)

<<<<>>>>

கடல்வாழ் உயரினங்களின் வாழ்விடமாக திகழும் அலையாத்தி காடுகளை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று மாநில சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் வலியுறுத்தியுள்ளார்.

மாமல்லபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அலையாத்தி பயணம் என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டு அவர் பேசினார்.

சங்க இலக்கியங்களில் அலையாத்தி காடுகளின் பெருமை குறித்து விளக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இந்த வகைக் காடுகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகக் கூறினார்.

பிச்சாவரம், முத்துப்பேட்டை பகுதிகளில் மட்டும் இருந்த அலையாத்தி காடுகள் தற்போது சென்னை அடையாறு, முட்டுக்காடு, கழிமுகப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, முன்பு 4 ஆயிரத்து 500 ஹெக்டேராக இருந்த இந்தவகை காடுகளின் பரப்பளவு, தற்போது 9 ஆயிரம் ஹெக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் திரு. கண்ணப்பன் தெரிவித்தார்.

<<<<>>>>

பசுந்தேயிலைக்கு மானியம் வழங்க அஇஅதிமுக நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் கட்டுமான பொறியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய அவர், இம்மாவட்டத்தைச் சேர்ந்த படுகர் இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என்றார்.

அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால் உதகை சுற்றுலா தலம் மேம்படுத்தப்படுவதுடன் நீலகரி மாவட்டத்தில் புதிய வீடுகள் கட்ட அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் காலனி ஆதிக்க அமைப்பாக திகழ்வதால் அதிலிருந்து விலகிக்கொள்வதாக ஆப்பிரிக்காவைச் சேர்ந்த மாலி, நைஜர் மற்றும் Burkina Faso ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

-----------

ரஷ்ய போர் விமானங்கள் எஸ்தோனியா வான்பரப்பில் அத்துமீறி பறந்ததற்கு நேட்டோ அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

-----------

2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நிலவுக்கு 10 நாள் பயணமாக விண்வெளி வீரர்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக அமெரிக்காவின் நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

-----------

மகாராஷ்டிராவில் ஆயிரத்து 296 கோடி ரூபாய் செலவில் சாலைகள் சீரமைக்கப்பட உள்ளதாக அம்மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஷிவ்ரேந்திர போஸ்லே தெரிவித்துள்ளார்.

-----------

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் நாட்டில் 3வது இடத்தில் தமிழகம் உள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

-----------

நியோ-மேக்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்களில் முதலீடு செய்து பாதிக்கப்பட்டவர்கள் அடுத்த மாதம் 8ஆம் தேதிக்குள் மதுரை பொருளாதார குற்றப்பிரிவு காவல் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

-----------

பெரம்பலூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி மிருனாளினி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

-----------

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவில் நவராத்திரி உற்சவத்தின் முதல் நாளான நேற்று காமாட்சி அம்மன், லட்சுமி-சரஸ்வதியுடன் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

-----------

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பேரிடர் மீட்பு மற்றும் தற்காப்புக்கான ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

ஈரோட்டை அடுத்த கேட்டுப்புதூரில் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 2 டன் எடையுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

-----------

ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயில் உண்டியலில் பக்தர்கள் காணிக்கையாக ஒரு கோடியே 14 லட்சம் ரூபாய் கிடைத்துள்ளது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இப்போட்டி துபாயில் இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

-------------

2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அகமதாபாதில் நடத்துவதற்கு இந்தியா முறைப்படி விண்ணப்பித்துள்ளது.

குஜராத் மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஹர்ஷ் சங்கவி மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திருமதி பி.டி. உஷா ஆகியோர் தலைமையில் லண்டன் சென்ற இந்தியக் குழுவினர், காமன்வெல்த் விளையாட்டு மதிப்பீட்டுக் குழுவிடம் நேற்று இதற்கான விண்ணப்பத்தை அளித்தனர்.

------------

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் 2ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில், ரைஃபிள், பிஸ்டல், ஷாட் கன் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 18 நாடுகளைச் சேர்ந்த 208 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் 69 பேர் கொண்ட அணி இதில் கலந்துகொள்கிறது.

<<<<The End>>>>